## கல்வித்துறை அபிவிருத்தி செயற்திட்டம் (ஈஎஸ்டிபீ)

---

### 1. அபிப்பிரயாம்

---

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களுற்கு இணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2011 ஒக்தோபர் 31 இல் முடிவடைந்த பத்து மாத காலப்பகுதிக்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2011 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2011 ஒக்தோபர் 31 இல் முடிவடைந்த பத்து மாத காலப்பகுதிக்காக விசேட (டொலர்) கணக்கிற்கான மீள் நிரம்பல்களும் அதிலிருந்தான பற்றுதல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2011 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கேடுகளுடன் திருப்திகரமாக இணக்கஞ் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது (எஸ்ஓஈஎஸ்) அவை கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடியுமென்றும்

(உ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட முறைப்பாடுகளைச் சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) நிதியளிப்பு உடன்படிக்கையில் சொல்லப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2007 ஓகத்து 07 ஆம் திகதிய எம்ஒஎவ்ஏ/ஈஆர்டி /2007/2 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்று நிருபத்தின்படி செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் ஒவ்வொரு ஆண்டின் மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்குரிய செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக 2012 மே 31 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2 நிதிசார் செயலாற்றல்

நிதிகளின் மூலங்கள் மற்றும் பயன்பாட்டின் கூற்று மற்றும் தரப்பட்ட தகவல்களின்படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த பத்து மாதத்திற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 26,496,647,000 ஆன தொகையானதுடன் 2011 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 166,964,000,000 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2011 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு பின்வரும் கூற்றில் காட்டப்படுகின்றது.

| வகுதி | 2011 ஒக்தோபர் 31 இல் முடிவடைந்த பற்று மாதகாலப் பகுதி | 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | 2011 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் |
| **ஐடிஏ பங்களிப்பு** | | | |
| **மூலதன செலவினம்** | | | |
| அபிவிருத்தி நடவடிக்கைகள் | 252 | 403 | 1,499 |
| மதிப்பாய்வும் மதிப்பீடுகளும் | 16 | 135 | 323 |
| கல்வி வெளியீடுகள் | 8 | 28 | 68 |
| நிதிஅமைச்சு – செயற்திட்ட செலவினம் | 3 | 7 | 27 |
| **ஐடிஏ அல்லாத பங்களிப்பு (தகுதிவாய்ந்த செலவினம்)** | | | |
| **மூலதனச் செலனவிம்** | | | |
| அபிவிருத்தி நடவடிக்கைகள் | 56 | 65 | 797 |
| மதிப்பாய்வும் மதிப்பீடுகளும் | 930 | 991 | 9,034 |
| கல்வி வெளியீடுகள் | 10 | 16 | 53 |
| நிதிஅமைச்சு – செயற்திட்ட செலவினம் | 1 | 30 | 860 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகள் | 269 | 529 | 1,336 |
| அபிவிருத்தி நடவடிக்கைகள் | 3,846 | 5,105 | 30,600 |
| மதிப்பாய்வும் மதிப்பீடுகளும் | 1,294 | 1,415 | 7,057 |
| கல்வி வெளியீடுகள் | 2 | 2 | 11 |

| **ஐடிஏ அல்லாத பங்களிப்பு (தகுதியற்ற செலவினம்)** | | | |
|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனங்கள் | 14,705 | 16,318 | 79,676 |
| பாடசாலைச் சீருடைகள் | 1,101 | 949 | 5,910 |
| குழாமற்ற கொடையாளிகள் | 1,764 | 2,606 | 11,033 |
| ஏனைய திறைசேரி பேரேட்டுக் கணக்குகள் | 2,239 | 3,923 | 17,186 |
| உயர்கல்வி அமைச்சு | - | - | 1,494 |
| | 26,496 | 32,522 | 166,964 |

2011 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினமான ரூபா 166,964 மில்லியன் தொகையான ஐடிஏ நிதிகள் மற்றும் திரட்டு நிதியிலிருந்து ஐந்து ஆண்டு காலத்தில் கல்வித்துறை அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக செய்யப்பட்ட ரூபா 1,917 மில்லியன் மற்றும் ரூபா 165,047 மில்லியனான செலவினங்களைக் கொண்டுள்ளது.

## 2.3 நிதிகளின் மூலங்கள் மற்றும் பயன்பாடுகளின் கூற்று

நிதிக்கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட நிதிகளின் மூலங்கள் மற்றும் பயன்பாடு என்பன கீழே காட்டப்படுகின்றன.

| | **2011 ஒக்தோபர் 31 இல் முடிவடைந்த காலம்** | |
|---|---|---|
| **நிதிகளின் மூலங்கள்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| சர்வதேச அபிவிருத்தி சங்கம் : | | |
| - மானியம் | 133 | |
| - கடன் | 146 | |
| திரட்டு நிதி | 26,802 | |
| உபமொத்தம் | | 27,081 |

**நிதிகளின் பயன்பாடு**

| | | |
|---|---|---|
| ஐடிஏ பங்களிப்பு - மூலதன செலவினம் | 279 | |
| ஐடிஏ அற்ற பங்களிப்பு – (தகுதிவாய்நத செலவினம்) – | 998 | |
| மூலதன செலவினம் மீண்டுவரும் செலவினம் | 5,410 | |
| ஐடிஏ அற்ற பங்களிப்பு (தகுதியற்ற செலவினம்) | 19,809 | 26,496 |
| மேலதிக நிதி | | 585 |

## 2.4 விசேட (டொலர்) கணக்கு - (உபபேரேட்டு இல.எஸ்எல் - 122)

செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகள் மற்றும் தரப்பட்ட தகவல்களின்படி, 2011 ஒக்தோபர் 31 இல் முடிவடைந்த பத்துமாதகாலத்திற்கான விசேட (டொலர்) கணக்கின் தொழிற்பாடுகள் கீழே பொழிப்பாக தரப்படுகின்றன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| **பெறுவனவுகள்** | | |
| 2011 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | இல்லை | இல்லை |
| கூட்டு :- மீள் நிரம்பல்கள் | | |
| - மானியம் | 726,744 | 80,671,273 |
| - கடன் | 753,997 | 83,696,456 |
| | 1,480,741 | 164,367,729 |
| கழி :- பற்றுதல்கள் | 1,480,741 | 164,367,729 |
| 2011 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறான மீதி | இல்லை | இல்லை |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) பிட்டிப்பானெவில் பாட புத்தகங்களிற்கான களஞ்சியத் தொகுதி – கட்டம் II இன் நிருமாணம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்குச் சொந்தமான பாடப்புத்தகங்களிற்காக களஞ்சியத் தொகுதியின் கட்டம் II இன் நிருமாணத்திற்காக ரூபா 25,700,000 பெறுமதியான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. மேற்படி, நிருமாணத்திற்காக கேள்விகளைக் கோரி 2010 ஓகத்து 30 இல் தேசிய புதினப் பத்திரிகைகளில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. குறைந்த விலைகளைச் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உடன்படிக்கையின்படி 2011 யூன் 30 அளவில் நிருமாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஐந்து சந்தர்ப்பங்களில் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. இறுதியாக உடன்பட்ட திகதியின்படி நிருமாண வேலைகள் 2012 மார்ச் 08 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், 2012 யூன் 15 இல் உள்ளவாறும் கூட நிருமாணம் பூர்த்தியாக்கப்பட்டு கட்டிடத்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கட்டிடத்தின் கொங்கிறிற் விட்டம் 4554 சதுர அடியாக அமைந்திருந்ததுடன் நிருமாணிக்கும்பணி இரண்டு கட்டங்களில் பூர்த்தியாக்கப்படுவதன் மூலம் கொங்கிறிற்இடுவதற்கு நிர்மானிப்பு நிறுவனம் போட அனுமதிக்கப்பட்டிருந்தது.

(iii) நிருமாண வேலைகளிற்காக 2010 ஆம் ஆண்டில் திறைசேரியின் பொது வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட ரூபா 25,417,690 தொகைப் பணத்தில்நிர்மான மற்றும் நிருவாக நடவடிக்கைகளிற்காக ரூபா 9,629,513 ஆன தொகை மீளாய்வுக் காலத்தின் போது செலவிடப்பட்டிருந்தது.

(iv) உடன்படிக்கையின் படி, நிருமாணிக்கப்பட்ட கட்டிடம் பெற்றுக்கொள்ளப்படும் சாத்தியமிருந்தால் தனியார் துறையினரிடமிருந்து வாடகைக்கு எடுக்கப்பட்ட டீன்ஸ் வீதியிலுள்ள புத்தக களஞ்சியத்திற்கான வாடகைச் செலவுகளாக செலுத்தப்பட்ட ரூபா 4.6 மில்லியன் தொகையை தவிர்க்கப்பட்டிருக்க முடியுமென மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) விஞ்ஞான நிலையத்திற்கான விடுதி வசதிகளிற்கு உதவியளித்தல்

விடுதி வசதியுடன் விஞ்ஞான நிலையத்தை அமைக்கும் நோக்கில் இப்பாகமுவ மத்திய கல்லூரியின் ஆண்கள் விடுதியைப் புதுப்பிப்பதற்காக ரூபா 3,505,697 ஆன தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், தங்குமிட வசதி வேறொரு இடத்தில் வழங்கப்பட்டமையினால் இந்தச் செலவுகள் பயனற்றவையாகுமென்று அவதானிக்கப்பட்டது.

**(இ) செயலாற்றல்**

(i) 2006 தொடக்கம் 2011 வரை கல்வித் துறையின் முன்னேற்றத்திற்காக செயற்திட்டத்தால் சர்வதேச அபிவிருத்திச் சங்க நிதியினைப் பயன்படுத்தி ரூபா 1,916,816,448 ஆன செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதே காலப்பகுதியில் கல்வித் துறை அபிவிருத்திக்காக திரட்டு நிதியத்திலிருந்து ரூபா 148,983,578,947 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணுதல்

(இ) உள்ளகக் கணக்காய்வு

(ஈ) ஒப்பந்த முகாமைத்துவம்